




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 281 | 4 Pages | 8.5.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 281 | 4 பக்கங்கள் | 8.5.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்**
**ஆற்றல் புரிந்தார்க ணில்**

**விளக்கம்: களவு என்பதற்கு காரணமான மயங்கிய அறிவு உடையவராயிருத்தல், அளவு அறிந்து வாழ்தலாகிய ஆற்றலை விரும்பினவரிடத்தில் இல்லை.**

## எல்லையில் வான் பாதுகாப்பு அமைப்புகள் தயார்




புதுடெல்லி, மே.8


பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இன்று இந்தியா அதிரடி தாக்குதல் நடத்தியது. நள்ளிரவு 1.44 மணியளவில் இந்தியாவில் இருந்து ஏவுகணைகள் பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து ஏவப்பட்டன.

மொத்தம் 9 இடங்களை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. ஆபரேஷன் சிந்தூர் என பெயரிடப்பட்ட இந்த தாக்குதலில்பயங்கரவாதமுகாம்கள்அழிக்கப்பட்டனர்.அதேவேளை, இந்தியா நடத்திய இந்த அதிரடி ஏவுகணை தாக்குதலில் பாகிஸ்தானில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 12 பேர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலை தொடர்ந்து இந்தியா , பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதிகளில், வான் பாதுகாப்பு அமைப்புகள் தயார் நிலையில் இருப்பதாகவும், எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயார் நிலையில் இருப்பதாகவும் இந்திய ராணுவம் அறிவித்துள்ளது. மேலும் "ஆபரேஷன் சிந்தூர்" தாக்குதல் குறித்து அமெரிக்கா, பிரிட்டன், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எம்ரேட்ஸ், ரஷ்யாவிடம் இந்தியா விளக்கம் அளித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த தாக்குதலில் முப்படைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. உளவுத்துறை கொடுத்த துல்லிய தகவலின் பெயரில் இந்த தாக்குதலை இந்திய ராணுவம் மேற்கொண்டுள்ளது. இதில் லஷ்கர்இதொய்பா, ஜெய்ஸ்இமுகம்மது தலைமையகங்கள் தகர்க்கப்பட்டுள்ளன. மேலும் மசூத் ஆசாரின் மதரசா அழிக்கப்பட்டுள்ளது. இந்திய ராணுவத்தின் பதிலடி தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தானின் லாகூரில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## இந்தியா அதிரடி தாக்குதல்: பாகிஸ்தானில் 8 பேர் பலி



டெல்லி, மே.8

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த மாதம் 22ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்ட லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டண்ட் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த தாக்குதலை தொடர்ந்து இந்தியா , பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியது.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இன்று இந்தியா அதிரடி தாக்குதல் நடத்தியது. நள்ளிரவு 1.44 மணியளவில் இந்தியாவில் இருந்து ஏவுகணைகள் பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து ஏவப்பட்டன.

மொத்தம் 9 இடங்களை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. ஆபரேஷன் சிந்தூர் என பெயரிடப்பட்ட இந்த தாக்குதலில்பயங்கரவாதமுகாம்கள்அழிக்கப்பட்டனர்.அதேவேளை, இந்தியா நடத்திய இந்த அதிரடி ஏவுகணை தாக்குதலில் பாகிஸ்தானில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும், 35 பேர் படுகாயமடைந்தனர்.

## நீதி நிலைநாட்டப்பட்டது; இந்திய ராணுவம்




டெல்லி, மே.8

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த மாதம் 22ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்ட லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின்கிளைஅமைப்பானதிரெசிஸ்டண்ட்பிரண்ட்பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த தாக்குதலை தொடர்ந்து இந்தியா , பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியுள்ளது. அதேவேளை, பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் மோடி, பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் உள்பட பலரும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மீது இந்தியா இன்று அதிரடி தாக்குதல் நடத்தியுள்ளது. நள்ளிரவு 1.44 மணிக்கு பாகிஸ்தான் மீதும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் இந்தியா தாக்குதல் நடத்தியுள்ளது. மொத்தம் 9 இடங்களில் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு ஆபரேஷன் சிந்தூர் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து நீதி நிலைநாட்டப்பட்டது என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ராணுவம் வெளியிட்டுள்ளஎக்ஸ்பதிவில்,#பெஹல்காம்பயங்கரவாததாக்குதல், நீதி நிலைநாட்டப்பட்டது. ஜெய் ஹிந்த். ஆபரேஷன் சிந்தூர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திமுக ஆட்சியின் 5ம் ஆண்டு தொடக்கம்: சந்தித்தது, சாதித்தது என்ன..?



சென்னை, மே. 8

2021ம் ஆண்டு மே மாதம் இதே நாளில், "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்.." என்ற சொல்லை உச்சரித்து, முதல்அமைச்சர் அரியணை ஏறினார், மு.க.ஸ்டாலின். அந்தத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி 159 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது மேடை பேச்சுகளில் எல்லாம், கடந்த 55 ஆண்டுகளில் தமிழ்நாடு கண்ட வளர்ச்சி, மாற்றங்களை 'திராவிட மாடல்' என்றும், அதன் நீட்சிதான் தனது ஆட்சி என்றும் கூறிவருகிறார்.

கடந்த 4 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் நிறைய திட்டங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்ற ப்பட்டுள்ளன. அதில், முதல்அமைச்சரின் காலை உணவுத் திட்டம், அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவசமாக மகளிர் விடியல் பயண திட்டம், மாதந்தோறும் ரூ.1000 மகளிர் உரிமைத்தொகை திட்டம், 'புதுமைப் பெண்' திட்டம் மூலம் உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை,

'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தின் மூலம் உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை, உயர் கல்விக்கு வழிகாட்டும் 'நான் முதல்வன்' திட்டம், வீடு தேடி சென்று சிகிச்சை அளிக்கும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி, விபத்தில் சிக்குபவர்களுக்கு உடனடி சிகிச்சை உதவிக்கு இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், வீடு அற்றவர்களுக்கு கலைஞரின் கனவு இல்லத் திட்டம் ஆகியவை முக்கியமானவை.

2021 சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 505 அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. அதில், குறிப்பிடப்படாத சில அறிவிப்புகளையும் ஆட்சிக்கு வந்த 4 ஆண்டு காலத்தில் தி.மு.க. அரசு நிறைவேற்றி இருக்கிறது. என்றாலும், பல அறிவிப்புகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் அரசின் மேல் உள்ளது.

குறிப்பாக, "தமிழ்நாட்டின் கடன் சுமை ரூ.9 லட்சம் கோடி அளவில் இருந்து குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். 'நீட்' தேர்வு ரத்து செய்யப்படும். 3 லட்சத்து 50 ஆயிரம் அரசு காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்" என்பது போன்ற தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற தி.மு.க.வின் அறிவிப்புகள் நிறைவேறுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

எதிர்க்கட்சிகள் எல்லாம், "தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை" என்று குற்றம்சாட்டி வருகின்றன. அது உண்மை என்று நம்பும் வகையில், கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தினமும் அரங்கேறிவருகின்றன. மத்திய அரசு மற்றும் தமிழக கவர்னருடன் அரசுக்கு இருக்கும் மோதல் போக்கு பல நேரங்களில் மாநில வளர்ச்சியில் பின்னடைவை ஏற்படுத்தும் என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

ஏற்கனவே, சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட 10 சட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல் இருந்த நிலையில், சுப்ரீம் கோர்ட்டு வரை சென்று வழக்காடி வெற்றி பெற்றதை தி.மு.க. அரசு சாதனையாக கருதுகிறது. தற்போது, பல்கலைக்கழகங்களின் வேந்தராக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிக்கப்பட்டுள்ளார். தேர்தலுக்கு இன்னும் ஒரு ஆண்டே இருக்கும் நிலையில், அதை மனதில் வைத்தே தி.மு.க. அரசு செயல் திட்டங்களை தீட்டிவருகிறது. புதிய திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளை அவ்வப்போது வெளியிட்டு வருகிறது.

இது ஒருபக்கம் இருந்தாலும், மற்றொரு பக்கம் தமிழ்நாட்டின் கடன் அளவும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே செல்வது நிதி அபாயத்தை காட்டுகிறது. 2025 26ம் ஆண்டில் மாநில அரசு ரூ.1 லட்சத்து 62 ஆயிரத்து 96 கோடியே 76 லட்சம் அளவுக்கு கடன் பெற திட்டமிட்டிருப்பதாக பட்ஜெட்டில் தெரிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31ந் தேதி நிலவரப்படி நிலுவையில் உள்ள கடன் ரூ.9 லட்சத்து 29 ஆயிரத்து 959 கோடியே 30 லட்சமாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சி ஒரு பக்கம் இருந்தாலும், மற்றொரு பக்கம் நிழல்போல் கடன் அளவும் உயர்ந்து வருவதை ஆரோக்கியமான வளர்ச்சியாக பார்க்க முடியவில்லை. இது போன்ற சூழ்நிலையில்தான் தி.மு.க. அரசு இன்று (புதன்கிழமை) 5வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. தேர்தலுக்கான காலக்கட்டம் இனி தொடங்கிவிடுவதால் மக்களை மகிழ்விக்கும் அறிவிப்புகளும் அவ்வப்போது வெளியாகும் என்று நம்பலாம்.

## தாராபுரம் அருகே உள்ள ரெட்டார வலசில் பிரத்தியங்கரா தேவி பீடம் நிறுவிய நடிகை புவனேஸ்வரி



தமிழ் சினிமா திரைப்பட நடிகையும், சின்னத்திரை சீரியல் நடிகையுமான புவனேஷ்வரி திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள ரெட்டார வலசில் பிரத்தியங்கரா தேவி பீடம் ஒன்றை நிறுவியுள்ளார்.

அதில் தினந்தோறும் பூஜைகளும், அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் விசேஷ பூஜைகளும் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து நடிகை புவனேஷ்வரி கூறியதாவது:

எனது பூர்வீகம் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் ஆகும். நான் பல்வேறு தமிழ் சினிமா படங்கள்மற்றும் ஏராளமானசின்னத்திரை சீரியல்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளேன். இந்த நிலையில் எனக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆன்மீக ஈடுபாடு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து நான் தீவிர ஆன்மீக பணியில் ஈடுபட்டு இருந்தேன்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு எனது கனவில் பிரத்யங்கரா அம்மன் தோன்றி ஒரு இடத்தை குறிப்பிட்டது. நானும் அந்த இடத்தை தேடி அலைந்தேன் முடிவில் அது திருப்பூர் மாவட்டம் ரெட்டார வலசு பகுதியில் உள்ள பிரத்தியங்கரா தேவி அம்மன் என்பதைஉணர்ந்தேன்.அதைதொடர்ந்து நான் இங்கு வந்து இந்த அம்மனை பூஜை செய்து வழிபட்டு வருகிறேன். பிரத்யங்கரா தேவி அம்மன் என்பது பஞ்சபாண்டவர் காலகட்டத்தில் அகத்திய முனிவருக்கு உதவிய அம்மனாகும். இங்குள்ளவராகி அம்மன் இந்திரஜித் வழிபட்ட தெய்வமாகும். அதுமட்டுமின்றி காலபைரவர்,விநாயகர் உட்பட பல்வேறு தெய்வங்கள் இங்கு குடி கொண்டுள்ளது. இங்குள்ள பிரத்தியங்கரா தேவி அம்மனை வழிபட்டால் வாழ்வில் உள்ள அனைத்து துன்பங்களும் விலகும், திருமணம் கைகூடும். வராஹி அம்மனை வழிபட்டால் கடன் தொல்லை நீங்கும், கல்வி பெருகும் என்பது ஐதீகம். இந்த நிலையில் இந்த கோவிலில் வருகின்ற 11ம் தேதி ஞாயிற்றுக்கிழமை குரு பெயர்ச்சி யாகம் நடைபெற உள்ளது. அதில் அனைத்து ராசியினரும் கலந்து கொண்டு தோஷ நிவர்த்தி செய்து கொள்ளலாம். மேலும் இக்கோவிலின் கும்பாபிஷேகம் வருகின்ற செப்டம்பர் மாதத்தில் நடைபெறஉள்ளது.அதற்கானஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது என புவனேஸ்வரி தெரிவித்தார்

## நீலகிரி மாவட்டம் குன்னூர் காணிக்கைராஜ் நகர் பகுதியில் 110 கிலோ தடை போதை பொருள் பறிமுதல்



நீலகிரி மாவட்டம் குன்னூர் காணிக்கைராஜ் நகர் பகுதியில் வெங்காய லோடு ஏற்றிவந்த தோஸ்த் வாகனத்தில் 110 கிலோ தடை செய்யப்பட்ட போதை பொருட்களை சிறப்பு குற்றப்பிரிவு போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஜார்ஜ்,பாஷா,ரமேஷ் ஆகியோர் அடங்கிய தனிப்படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர் இதில் கூடலூர் பகுதியை சேர்ந்த சந்தீப்(40)த/பெ.சதானந்தன், சிவகுமார்(38) த/பெ ஆறுமுகம் ஆகியோர் KL 07 CF 8488 எண் கொண்ட தோஸ்த் வாகனத்தில் வெங்காய மூட்டைகளுக்கு அடியில் 110 கிலோ போதை பொருட்களை வைத்து கடத்தி வந்தது கண்டுபிடித்தனர்

இதன் மதிப்பு சுமார் 3.75 லட்சம் ஆகும் இதைத் தொடர்ந்து தகவலி ருந்த மாவட்ட கண்காணிப்பாளர் எஸ்.என்.நிஷா அவர்கள் அருவங்காடு காவல் நிலையத்திற்கு வந்து பறிமுதல் செய்யப்பட்ட போதை பொருட்களை பார்வையிட்டு உதவி ஆய்வாளர் ஜார்ஜ்,பாஷா,ரமேஷ் ஆகியோரின் சிறப்பான பணியை பாராட்டி வெகுமதி வழங்கப்படும் என்று கூறினார் மேலும் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் திருக்குளத்தில் மூழ்கி உயிரிழந்த வேதம் பயின்று வந்த 3 மாணவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி உதவி



திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் திருக்குளத்தில் மூழ்கி உயிரிழந்த வேதம் பயின்று வந்த 3 மாணவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியை அமைச்சர் நாசர் வழங்கினார்,

தாம்பரம் சேலையூரில் உள்ள அஹோபில மடத்தில் வேதம் பயின்று வந்த வீரராகவன்24 வெங்கட்ராமன்17 ஹரிகரன்16 நேற்று திருவள்ளூர் வீரராகவ பெருமாள் திருக்குளத்தில் இறங்கி படியில் சந்தியாவந்தனம் செய்தபோது நீரில் மூழ்கி உயிரிழந்தனர்,

உயிரிழந்த மூன்று குடும்பங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்து ஆறுதல் கூறி 3 குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியான தலா 3 லட்சம் அறிவிப்பு செய்திருந்தார், உயிரிழந்த மூன்று குடும்பங்களுக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியானதலா 3 லட்சத்திற்கானகாசோலையை இன்றைய தினம் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் நாசர் வழங்கி ஆறுதல் கூறினார்,




# கடலூர் முதுநகர் அருகே தனியார் பள்ளியில் ஆசிரியை தற்கொலை

கடலூர்,மே.8

கடலூர் முதுநகர் அருகே செம்மங்குப்பம் மேட்டு தெருவை சேர்ந்தவர் கிருஷ்ணராஜ்.

இவரது மனைவி நந்தினி (29). இவர்களுக்கு 4 வயதில் பெண் குழந்தை உள்ளது. கிருஷ்ணராஜ் மருந்து விற்பனை பிரதிநிதியாக உள்ளார். நந்தினி முதுநகர் அருகே தனியார் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தார்.

தற்போது பள்ளி விடுமுறை விடப்பட்டுள்ளதால் விடைத்தாள்கள் திருத்தும் பணிக்காக வழக்கம்போல் நந்தினி பள்ளிக்கூடத்துக்கு வந்திருந்தார். அப்போது திடீரென வகுப்பறைக்கு சென்ற அவர் மின்விசிறியில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து முதுநகர் போலீசார் வழக்கு பதிந்து நந்தினி குடும்ப பிரச்னை காரணமாக தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என விசாரித்து வருகின்றனர்.

# கள்ளக்குறிச்சி பள்ளி கலவரம் மே 15ல் 615 பேர் ஆஜராக உத்தரவு




கள்ளக்குறிச்சி, மே.8

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகில் உள்ள கனியாமூர் தனியார் பள்ளி விடுதியில் தங்கி பிளஸ்2 படித்து வந்த மாணவி ஸ்ரீமதி 2022ம் ஆண்டு ஜூலை 13ம் தேதி மர்மமான முறையில் உயிரிழந்தார். இவருடைய மரணத்துக்கு நீதி கேட்டு பல்வேறு அமைப்புகளை சேர்ந்த இளைஞர்கள் நடத்திய போராட்டம் கலவரமாக மாறி வன்முறையில் முடிந்தது. இதில் தனியார் பள்ளி கலவரம் தொடர்பாக இறந்த மாணவியின் தாய் செல்வி, விசிக கடலூர் மாவட்ட செயலாளர் திராவிடமணி உள்பட 615 பேர் மீது கள்ளக்குறிச்சி சிறப்பு புலனாய்வு குழு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கு முதல் முறையாக மே 15ம் தேதி விசாரணைக்கு வருகிறது. வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 615 பேரும் கள்ளக்குறிச்சி குற்றவியல் நீதி துறை நடுவர் எண்2ல் ஆஜராக நீதிபதி ரீனா உத்தரவிட்டுள்ளார். வரலாற்றில் முதல் முறையாக ஒரு வழக்கில் ஒரே நேரத்தில் 615 பேர், மே 15ம் தேதி ஆஜராக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாமல்லபுரத்தில் 11ம் தேதி பாமக மாநாடு இசிஆர் சாலை வழியாக 39 கி.மீ வாகனங்கள் செல்வதற்கு தடை: விழுப்புரம் காவல்துறை உத்தரவு



விழுப்புரம், மே.8

மாமல்லபுரத்தில் 11ம் தேதி பாமக மாநாடு நடைபெறும் நிலையில் இசிஆர் சாலையில் சுமார் 39 கிலோமீட்டர் தூரம் வாகனங்கள் செல்ல காவல் துறைதடைவிதித்துள்ளது. பாமக மற்றும் வன்னியர் சங்கம் சார்பில் சித்திரை முழு நிலவு மாநாடு வரும் 11ம் தேதி மாமல்லபுரம் பகுதியில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டுக்கு செல்லும் வாகனங்களுக்கு காவல்துறை தரப்பில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2013ம் ஆண்டு ஏப்ரல் 23ம் தேதி வன்னியர் சங்கத்தின் இளைஞர் பெருவிழாவுக்கு விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் கிழக்கு கடற்கரை சாலை வழியாக பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த பாமகவினர் வாகனங்களில் சென்றனர்.

அப்போது மரக்காணம் பகுதியை சேர்ந்த சிலருக்கும், இளைஞர் சங்க மாநாட்டுக்கு சென்ற பாமகவினருக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு அது கலவரமாக மாறியது.

இந்த கலவரத்தின் போது சாலையில் நின்றிருந்த அரசு மற்றும் தனியார் பஸ்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

அதோடு அரசு பஸ்கள் உள்பட சில வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. அதுமட்டுமின்றி அப்பகுதியில் உள்ள வீடுகளும் தீ வைத்து எரிக்கப்பட்டன. இச்சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மாமல்லபுரத்தில் நடைபெற இருக்கும் மாநாட்டில் பங்கேற்க வாகனங்களில் செல்பவர்கள் கிழக்கு கடற்கரை சாலையில் விழுப்புரம் மாவட்டம் சின்னகோட்டக்குப்பம் முதல் தாழங்காடு வரையுள்ள 39 கி.மீ. தூரமுள்ள சாலையில் செல்வதற்கு தடை விதித்து மாவட்ட காவல்துறை உத்தரவிட்டுள்ளது.

மேலும் கடலூர், புதுச்சேரி மார்க்கங்களில் இருந்து வரும் வாகனங்கள் அனைத்தும் திண்டிவனம், மதுராந்தகம் வழியாக மாநாட்டு திடலை சென்றடைய வேண்டும். மாநாட்டுக்கு செல்லக்கூடிய வாகனங்களில் ஒலிப்பெருக்கி பயன்படுத்தக்கூடாது, கோஷமிட்டு செல்லக்கூடாது, வாகனங்களில் மது பாட்டில்கள், ஆயுதங்கள் எடுத்துச் செல்லக்கூடாது என்று உத்தரவுகள் காவல் துறை தரப்பில் வாய்மொழியாக பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் நடவடிக்கை: பெ.சண்முகம் வலியுறுத்தல்



சென்னை, மே.8

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பெ.சண்முகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே வடகாடு கிராமத்தில் நடைபெற்ற கொடூரமான தாக்குதலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வன்மையாக கண்டிக்கிறது.

தமிழ்நாடு அரசு இந்த தாக்குதலில் ஈடுபட்ட சமூக விரோதிகள் அனைவரையும் எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிந்து கைது செய்ய வேண்டும். வீடுகளையும், உடமைகளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு அரசு உடனடியாக உரிய இழப்பீடுகளை வழங்கி அவர்கள் மீண்டும் குடியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

# அரசின் சாதனைகளை ஊடகங்கள் மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



சென்னை, மே.8

சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடந்த பத்திரிகையாளர்கள் – ஊடகத்துறையினர் சந்திப்பு நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: அனைத்து துறைகளிலும், தமிழ்நாடு சிறந்த இடத்தை,முதல்இடத்தை நோக்கி சென்றுகொண்டு இருக்கிறதோ, அதே போல விளையாட்டுத்துறையிலும் இந்திய ஒன்றியத்திலேயே முதலிடத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இந்த நான்கு வருடத்தில் மட்டும் திமுக அரசு ரூ.545 கோடி செலவில் விளையாட்டு உட்கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளோம். இது கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகம். யு.பி.எஸ்.சி. மெயின்ஸ் எழுதப்போன ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா 25,000 ரூபாய் ஊக்கத்தொகை கொடுத்தோம். தற்போது இத்திட்டத்தின் கீழ் தங்கி பயில வசதி ஏற்படுத்தி கொடுத்தோம். இதனால், நான் முதல்வன் திட்டத்தின் போட்டி தேர்வு பிரிவு தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே 47 மாணவர்கள் தேர்ச்சி பெற்றார்கள்.

இந்த ஆண்டு 50 மாணவர்கள் வெற்றி பெற்றார்கள். வரும் வருடங்களில் 100, 200 ஆகவேண்டும் என்பதுதான் முதல்வரின் எண்ணமாகும். திமுக அரசு அமைந்த முதல் ஆண்டில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.20,000 கோடி வங்கி கடன் இணைப்பாக வழங்கப்பட்டது. 2023ம் ஆண்டில் அதனை ரூ.30,000 கோடியாக உயர்த்தினோம். 2024ம் ஆண்டில் ரூ.35,000 கோடி மகளிர் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கு ரூ.37,000 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கட்டாயம் அந்த இலக்கை அடைவோம். மகளிர் சுய உதவிக்குழுக்கள், இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள், மாணவர்கள் என எல்லோருக்கும் எல்லாம் என்ற அனைவருக்குமான அரசாக திராவிட மாடல் அரசு முதல்வர் தலைமையில் செயல்பட்டு வருகின்றது. ஆகவே, ஊடகங்கள் இந்த சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

# சமூகநீதியில் சாதனை படைப்பதே இலக்கு மாமல்லபுரம் நோக்கி அணிவகுக்க தயாராகுங்கள்: தொண்டர்களுக்கு ராமதாஸ் கடிதம்




சென்னை, மே.8

பாமக நிறுவனர் ராமதாஸ் தொண்டர்களுக்கு நேற்று எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: மாமல்லபுரம் சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா என்பது அரசியல் விழா அல்ல, மாறாக நமது குடும்ப விழா. இந்த மாநாட்டில், தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. மாநாட்டுக்கான பணிகள் ஒருபுறம் நடைபெற்று வந்தாலும், மாநாட்டின் முதன்மை அம்சம் உங்களின் வருகைதான். நீங்கள் இல்லாமல் மாநாடு இல்லை.

லட்சக்கணக்கில் நீங்கள் வந்தால்தான் மாநாடு முழுமை பெறும். மாநாட்டுக்காக நான் விடுத்த அழைப்புகளை ஏற்று மாமல்லபுரத்தை நோக்கி அணிவகுக்க நீங்கள் அனைவரும் தயாராகி விட்டீர்கள் என்பதை அறிவேன். ஆனாலும், மாநாட்டில் பங்கேற்பது எப்படி உனது கடமையோ, அதே போல், மாநாட்டுக்கு வரும்படி அழைக்க வேண்டியது எனது கடமை. ஆகவே, மீண்டும் ஒருமுறை அழைக்கிறேன், மாமல்புரம் நோக்கி அணி வகுக்கத் தயாராகுங்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 3 வாரங்களுக்கு பிறகு நடிகை குஷ்புவின் எக்ஸ் பக்கம் மீட்பு



சென்னை, மே.8

பாஜ பிரமுகர் நடிகை குஷ்புவின் எக்ஸ் வலைதள கணக்கு சில தினங்களுக்கு முன்பு ஹேக் செய்யப்பட்டது. இதுதொடர்பாக காவல் துறையில் புகார் அளித்திருந்தார். மேலும் தனது இன்ஸ்டாகிராமிலும் குஷ்பு பதிவிட்டிருந்தார். தொடர்ந்து எக்ஸ்தளத்தில் ஆக்ட்டிவாக இயங்கி வந்த குஷ்பு, 3 வாரங்களாக எதுவும் பதிவிட முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் தனது எக்ஸ் பக்கம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார் குஷ்பு.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், “3 வாரங்களுக்குப் பிறகு ஒருவழியாக திரும்ப வந்துவிட்டேன். உங்கள் அனைவரையும் மிஸ் செய்தேன். இந்த 3 வாரங்களில் நிறைய விஷயங்கள் நடந்துவிட்டன. மீண்டும் ஒருமுறை இணைந்து முன்னேறுவோம். கதைகளைப் பகிர்ந்து கொள்ளவும், உங்களிடமிருந்து நிறைய கேட்கவும் ஆவலுடன் காத்திருக்கிறேன். எல்லாவற்றிற்கும் மிக்க நன்றி. அனைவருக்கும் என் அன்பு” என்று தெரிவித்துள்ளார்.

# தேனி, தேவாரம் அருகே இந்து முன்னணி நிர்வாகி கைது




உத்தமபாளையம், மே.8

தேனி மாவட்டம், தேவாரம் அருகே எர்ணம் பட்டியைச் சேர்ந்தவர் சந்திரபோஸ், இவர், உத்தமபாளையம் தாலுகா அலுவலகத்துக்கு பட்டா மாறுதலுக்காக சென்றார். அங்கிருந்த ஒருவர் தன்னை துணைதாசில்தார் என அறிமுகம் செய்து, அங்கு இருந்த நபரை தாசில்தார் என கூறி அவரிடம் பட்டா மாறுதலுக்காக 4 தவணைகளில் ரூ.1.07 லட்சத்தை சந்திரபோசிடம் வாங்கியுள்ளனர். ஆனால் பணியை முடித்து தரவில்லை.

விசாரணையில் தாசில்தார் என பணம் வாங்கியது இந்து முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராம்செல்வா, துணை தாசில்தார் என கூறியது இந்து முன்னணி நகரத்தலைவர் பெரியசாமி தாக்கரே என தெரிய வந்தது. ராம்செல்வாவை போலீசார் கைது செய்தனர்.

# சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு சிறப்பு பஸ்கள்: மேலாண் இயக்குநர் தகவல்



சென்னை, மே.8

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: 11ம் தேதி இரவு 8.48 மணி முதல் 12ம் தேதி இரவு 10.44 மணி வரை (திங்கட்கிழமை) சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் கிளாம்பாக்கத்திலிருந்து வரும் 11ம் தேதி 1,156 பேருந்துகளும் மற்றும் 12ம் தேதி 966 பேருந்துகளும் மாதவரத்திலிருந்து 11ம் தேதி 150 பேருந்துகளும் 12ம் தேதி 150 பேருந்துகளும் தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும் மற்றும் கோயம்பேட்டிலிருந்தும் இயக்கப்படும்.

மேலும், பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு 11ம் தேதி 1,940 பேருந்துகளும் 12ம் தேதி 1,530 பேருந்துகளும் தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும்.

இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனம் கொண்ட 40 பேருந்துகள் கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு 11, 12ம் தேதி களில் இயக்கப்படும்.

இதுதவிர சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருநெல்வேலி, நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு அரசு பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு *www.tnstc.in* < *http://www.tnstc.in* > மற்றும் *Mobile App* மூலம் முன்பதிவு செய்து பயணிக்கலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அதிமுக ஆட்சியில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த விவகாரம்: மாஜி மாசுகட்டுப்பாடு வாரிய அதிகாரி வீட்டில் அமலாக்கத்துறை ரெய்டு: நர்சிங் கல்லூரி முதல்வர் வீடு உள்பட 5க்கும் மேற்பட்ட இடங்களில் நடந்தது



சென்னை, மே.8

அதிமுக ஆட்சியில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த விவகாரம் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்த நிலையில், முன்னாள் மாசுகட்டுப்பாடு வாரிய கண்காணிப்பாளர் பாண்டியன் வீடு, தனியார் நர்சிங் கல்லூரி முதல்வர் வீடு என சென்னையில் 5க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை நேற்று சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றியது.

அதிமுக ஆட்சி காலத்தில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய கண்காணிப்பாளராக பாண்டியன் பணியாற்றினார். அவரது பணிக்காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக சொத்துகள் சேர்த்ததாக வந்த புகாரை தொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் கடந்த 2021ம் ஆண்டு கண்காணிப்பு பொறியாளர் பாண்டியனுக்கு சொந்தமான வீடு, சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் உள்ள அவரது அலுவலகத்தில் அதிரடி சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் பல கோடி மதிப்புள்ள சொத்து பத்திரங்கள், ரொக்கம் பணம், பினாமி பெயர்களில் வாங்கப்பட்டுள்ள சொத்துகள், வங்கிகணக்கு விவரங்கள் என அனைத்து ஆவணங்களையும் அதிகாரிகள் பறிமுதல் செய்து சோதனை நடத்தினர். இந்த சோதனையின் போது மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். சோதனை முடிந்த பிறகுதான் எத்தனை கோடி வரை சட்ட விரோதமாக பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து முழுமையான தகவல் தெரியவரும் என அமலாக்கத்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

காட்பாடி அடுத்த தொண்டான்துளசியை சேர்ந்தவர் மேத்தாகிரி. இவர் வேலூர் மாநகரில் பல்வேறு இடங்களில் ஓட்டல்கள், ரியல் எஸ்டேட், பிரபல மருத்துவமனையில் கேட்டரிங் சர்வீஸ் நடத்தி வருகிறார். நேற்று அதிகாலை சென்னையில் இருந்து அமலாக்க துறை அதிகாரிகள் 5 பேர் ஒரே காரில் காட்பாடிக்கு வந்தனர். ஓடை பிள்ளையார் கோயில் அருகே மெயின் ரோட்டை ஒட்டி உள்ள மேத்தாகிரி அலுவலகத்தில் திடீரென சோதனையில் ஈடுபட்டனர். தொடர்ந்து காலை 7.30 மணிக்கு காட்பாடி அடுத்த தொண்டான்துளசியில் உள்ள மேத்தாகிரி வீட்டில் அமலாக்க துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த விவகாரம் தொடர்பாக சோதனை நடந்ததாக கூறப்படுகிறது.

# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ரூ.20,000 பண்டிகை கால முன்பணம்: அரசாணை வெளியீடு



சென்னை, மே.8

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பண்டிகைகால முன்பணம் ரூ.20 ஆயிரமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஏப்ரல் 28ம் தேதி பேரவையில் விதி 110ன் கீழ் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக 9 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் பண்டிகை கால முன்பண உயர்வு பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டார். அந்த அறிவிப்பில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் குடும்பத்தினருடன் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடும் வகையில், இது வரை வழங்கப்பட்டு வரும் பண்டிகை கால முன்பணம் ரூ.10 ஆயிரம், இனி ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறியிருந்தார். இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதத்தில் அதற்கான அரசாணையை நிதித்துறை செயலாளர் உதயச்சந்திரன் நேற்று பிறப்பித்தார். அந்த உத்தரவில் கூறி இருப்பதாவது: உள்ளாட்சி அமைப்புகளின் கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள், அரசு ஊழியர்கள் என பண்டிகை கால முன்பணம் பெறும் தகுதியுடைய அனைவருக்கும், இந்த அரசாணை பொருந்தும். அதன்படி அவர்கள் ரூ.20 ஆயிரத்தை பண்டிகை கால முன்பணமாக பெற்றுக் கொள்ளலாம். அந்த பணத்தை பிடித்தம் செய்யும் முறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உரிமை கோரப்படாத இறந்தவர்களின் உடல்களை கண்ணியமாக அடக்கம் செய்வது தொடர்பாக சுற்றறிக்கை: அரசுக்கு மாநில மனித உரிமை ஆணையம் பரிந்துரை

சென்னை, மே.8

உரிமை கோரப்படாத இறந்தவர்களின் உடல்களை கண்காணித்து, கண்ணியமான முறையில் அடக்கம் செய்வது தொடர்பாக சுற்றறிக்கை வெளியிடுமாறு தமிழக அரசுக்கு மாநில மனித உரிமை ஆணைய பரிந்துரை செய்துள்ளது.

வேலூர் மாவட்டம், சோளிங்கர் அரசு மருத்துவமனையில் கடந்த 2018ம் ஆண்டு இறந்த 70 வயது முதியவர் ராஜாராமன் என்பவரின் உடலை அடக்கம் செய்வதற்காக 3 சக்கர குப்பை வண்டியில் பொதுவெளியில் எடுத்து சென்றுள்ளனர். இதுதொடர்பாக வெளியான செய்தியின் அடிப்படையில் மாநில மனித உரிமை ஆணையம் தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. இவ்வழக்கு மாநில மனித உரிமை ஆணைய உறுப்பினர் வி.கண்ணதாசன் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த ஆணைய உறுப்பினர், இந்த வழக்கில் மரணத்திற்கு பிந்தைய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது.

இது மனித உரிமை மீறிய செயலாகும். தமிழகம் முழுவதும் உரிமை கோரப்படாத இறந்தவர்களின் உடல்களை கண்ணியமான முறையில் அடக்கம் செய்வது தொடர்பாக மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்துகளுக்கு தமிழக அரசு உடனடியாக சுற்றறிக்கை வெளியிட வேண்டும். உரிமை கோரப்படாத இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு தேவையான நிதியை ஒதுக்குவது தொடர்பாக உரிய வழிக்காட்டு நெறிமுறைகளை தமிழக அரசு உருவாக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளார்.

## குழி தோண்டி சிறுக சிறுக சேமித்த ரூ.1 லட்சத்தை கரைத்த கரையான்: கண்ணீர் விட்டு கதறும் கூலித்தொழிலாளி



திருப்புவனம், மே.8

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கிளாதிரி கக்கனம்பட்டியை சேர்ந்த கூலித்தொழிலாளி குமார் (35). மனைவி முத்துக்கருப்பி. இவர்களுக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன் உள்ளனர். ஓலை வேய்ந்த கூரை வீட்டில் வசித்து வருகின்றனர். இருவரும் கூலி வேலைக்கு சென்று கிடைத்த பணத்தை, குடும்ப செலவுகள் செய்தது போக சிறுக சிறுக சேமித்து வைத்துள்ளனர். அந்த பணத்தை ரூ.500 நோட்டுகளாக மாற்றி ஒரு தகர உண்டியலில் வைத்து வீட்டினுள் குழிதோண்டி புதைத்து வைத்துள்ளனர்.

குழந்தைகளின் காதணி விழாவிற்காக சேமித்த பணத்தை, சில மாதங்களுக்கு முன்பு உண்டியலை தோண்டி எடுத்து எண்ணினர். அப்போது ஒரு லட்ச ரூபாய் வரை இருந்ததால், மேலும் சேமிக்க வேண்டும் என நினைத்து, மீண்டும் மண்ணுக்குள் புதைத்து வைத்தனர். நேற்று காலை தகர உண்டியலை தோண்டி எடுத்துள்ளனர். அப்போது சமீபத்தில் பெய்த மழையால் தகரத்தை கரையான் அரித்து உள்ளே இருந்து ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் இருந்த 500 ரூபாய் நோட்டுகள் வீணாகி இருப்பது தெரிந்தது. ரூபாய் நோட்டுகளை கரையான் அரித்ததை பார்த்த குடும்பமே கண்ணீர் விட்டு கதறி அழுதுள்ளது. வங்கியில் கரையான் அரித்த பணத்தை மாற்றலாம் என கூறியதை அடுத்து, வங்கிக்கு சென்றுள்ளனர். வங்கி அதிகாரிகள் கிழிந்த நோட்டுகளை தான் மாற்ற முடியும். கரையான் அரித்த நோட்டுகளை மாற்ற முடியாது என கூறியதால், குடும்பமே சோகத்தில் மூழ்கி கிடக்கின்றனர். சிவகங்கை வருவாய்த் துறை அலுவலர்கள் தகவல் அறிந்து வந்து பணத்தை மாற்ற நடவடிக்கை எடுப்பதாக ஆறுதல் கூறியுள்ளனர்.

## காரைக்குடி அருகே அரசு பஸ்வேன் மோதல் 3 லோடுமேன்கள் சாவு: 20 பேர் படுகாயம்



காரைக்குடி, மே.8

காரைக்குடி அருகே அரசு பஸ், பால் வேன் மோதிய விபத்தில் 3 லோடுமேன்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். திருச்சியில் இருந்து ராமேஸ்வரம் நோக்கி அரசு பஸ் நேற்று முன்தினம் இரவு புறப்பட்டு சென்றது. இதில், 40க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். நேற்று அதிகாலை 1 மணியளவில் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி பஸ் நிலையத்திற்கு வந்த அரசு பஸ் மீண்டும் புறப்பட்டுச் சென்றது. காரைக்குடி, செஞ்சை தேனாற்று பாலம் அருகே பஸ் சென்றபோது, எதிரே ஈரோட்டில் இருந்து திருப்புத்தூர் வழியாக காரைக்குடி வந்த பால் வேன் மோதியது. இதில் வேனின் முன்பகுதி மற்றும் பஸ்சின் முன்பகுதி அப்பளம் போல நொறுங்கியது.

வேனில் இருந்த பால் இறக்கும் லோடுமேன்களான திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு ஆறுமுகம் (52), சாணார்பட்டி கர்ணன் (31), தமிழ் பாண்டி (27) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

வேன் டிரைவர் ரூபன் (22) கால் துண்டிக்கப்பட்டது. பஸ் கண்டக்டர் செல்வேந்திர பிரசாத், டிரைவர் நாகராஜன் மற்றும் பயணிகள் உள்பட 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து காரைக்குடி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். வேன் டிரைவர் ரூபன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மதுரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மதுரை விளாச்சேரியை சேர்ந்தவர் சையது (45). இவர் தனது குடும்பம் மற்றும் உறவினர்களுடன் கடந்த 2 நாட்களுக்கு முன் சுற்றுலா வேனில் கொடைக்கானல் சென்றார். அங்கு சுற்றுலாத்தலங்களை பார்த்துவிட்டு நேற்று முன்தினம் இரவு மதுரைக்கு புறப்பட்டு வந்தனர். வேனை விளாச்சேரியைச் சேர்ந்த மொக்கைச்சாமி (45) ஓட்டினார். இரவு 10 மணியளவில் தேவதானப்பட்டி காட்ரோடு அருகே, டம்டம் பாறை மலைப்பாதையில் வேன் வந்தபோது, எதிரே வந்த கார் மீது மோதாமல் இருக்க டிரைவர் வேனை திருப்பியுள்ளார்.

இதில் கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலையில் கவிழ்ந்தது. இதில் டிரைவர் மொக்கைச்சாமி, வேனில் இருந்த சையது, அவரது உறவினர்கள் உள்பட 21 பேர் காயமடைந்தனர். மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி ஜின்னத்பேகம் என்பவர் உயிரிழந்தார். விபத்து காரணமாக கொடைக்கானல் மலைச் சாலையில் சுமார் 30 நிமிடம் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## தூத்துக்குடி கடலில் மூழ்கி ஆட்டோ டிரைவர், சிறுமி பரிதாப பலி





தூத்துக்குடி, மே.8

தூத்துக்குடி தாளமுத்து நகர், எம்ஜிஆர் நகரைச் சேர்ந்தவர் அந்தோணி விஜயன் (40), ஆட்டோ டிரைவர். இதே பகுதி சுனாமி காலனியை சேர்ந்த முருகன் மகள் காளீஸ்வரி (16). உறவினர்களான இவர்கள் உள்ளிட்ட பலர் நேற்று முன்தினம் மாலை தாளமுத்து நகரில் நடந்த குடும்ப விழாவிற்கு வந்திருந்தனர். விழா முடிந்ததும் அந்தோணி விஜயன் மற்றும் காளீஸ்வரி, அவரது தம்பி உள்பட 7 பேர், தாளமுத்து நகர் மொட்டை கோபுரம் கடற்பகுதியில் குளிக்கச் சென்றனர்.

அப்போது திடீரென காளீஸ்வரி ஆழமான பகுதிக்கு சென்று விட்டார். ராட்சத அலையில் சிக்கி உயிருக்கு போராடிய அவரை அந்தோணி விஜயன் காப்பாற்ற முயன்றுள்ளார். ஆனால் இருவரும் கடலில் மூழ்கி பலியாகினர். நேற்று முன்தினம் இரவு வெள்ளப்பட்டி கடற்பகுதியில் காளீஸ்வரியின் உடலும், நேற்று காலை அந்தோணி விஜயனின் உடலும் கரை ஒதுங்கியது.

## இஸ்லாமியர் மீது வெறுப்பை பரப்ப முயற்சிப்பதா? மதுரை ஆதீனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்: திருமாவளவன் வலியுறுத்தல்





சிதம்பரம், மே.8

இஸ்லாமியர்களுக்கு எதிராக வெறுப்பை பரப்ப முயற்சித்துள்ள மதுரை ஆதீனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திருமாவளவன் தெரிவித்தார். கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்பி நேற்று அளித்த பேட்டி: மதுரை ஆதீனம், அவரது உயிருக்கு இஸ்லாமியர்களால் பாதுகாப்பில்லை என கூறியது அதிர்ச்சி அளித்தது.

இதுகுறித்து காவல்துறை சிசிடிவி வெளியிட்டதில் அம்மாதிரியான நிகழ்வு ஒன்றுமில்லை. இது தன்னிச்சையாக நடைபெற்ற விபத்து. அதிலிருந்து ஆபத்தின்றி தப்பித்துள்ளார். உயர்ந்த பொறுப்பில் உள்ள மடாதிபதி சமூக பதற்றம் ஏற்படாத வகையில் அமைதியை நிலை நாட்டுவதில் கவனமாக இருக்க வேண்டும். ஆனால் அவர் கொலை செய்ய முஸ்லிம்கள் முயற்சித்தார்கள் என்றெல்லாம் சொல்லியது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது இஸ்லாமியருக்கு எதிரான வெறுப்பை பரப்புவதற்காக ஒரு முயற்சியை, சிறுபான்மை சமூகத்தினரை, இந்து சமூகத்தினருக்கு எதிராக தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இதை குற்ற செயலாக மாற்றுவதற்கு முயல்கிறார். அவரது பேட்டியை சாதாரணமானது என கடந்து போய்விட முடியாது.

இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம் திருவோணம் அருகே வடகாடு கிராமத்தில் கோவில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிற சமயத்தில் 100க்கும் மேற்பட்டவர்கள் ஆதிதிராவிட பகுதிக்கு சென்று நூற்றுக்கணக்கான வீடுகளையும் மற்றும் கார் உள்ளிட்ட வாகனங்களையும் வீட்டில் உள்ள பொருட்களையும் அடித்து நொறுக்கி தாக்குதலில் ஈடுபட்டுள்ளது, கண்டனத்துக்குரியது. இதில் காவல் துறையினர் சரியான முறையில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாடு முழுவதும் டிஎஸ்பிக்கள் 13 பேர் பணியிட மாற்றம்: டிஜிபி சங்கர் ஜிவால் நடவடிக்கை



சென்னை, மே.8

தமிழகம் முழுவதும் 13 டிஎஸ்பிக்களை பணியிட மாற்றம் செய்து டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார். தமிழக டிஜிபி சங்கர் ஜிவால் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி டிஎஸ்பியாக இருந்த நந்தகுமார் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு டிஎஸ்பியாகவும், மதுரை நகர செல்லூர் உதவி கமிஷனராக இருந்த ரவிசந்திர பிரகாஷ் வேலூர் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணைய டிஎஸ்பியாகவும், திருவள்ளூர் மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணைய டிஎஸ்பியாக இருந்த அசோகன் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை டிஎஸ்பியாகவும், தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு ஆவண காப்பக டிஎஸ்பியாக இருந்த தங்கவேல் கள்ளக்குறிச்சி டிஎஸ்பியாகவும்,

சென்னை பொருளாதார குற்றப்பிரிவு டிஎஸ்பியாக இருந்த மனிஷா கடலூர் மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணை டிஎஸ்பியாகவும், திருச்சி நகர தில்லைநகர் உதவி கமிஷனராக இருந்த தங்கபாண்டியன் விழுப்புரம் மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணைய டிஎஸ்பியாகவும், திருப்பத்தூர் மாவட்ட குற்றப்பிரிவு டிஎஸ்பியாக இருந்த வி.எஸ்.ஜி.சுரேஷ் வேலூர் மாவட்டம் குடியாத்தம் டிஎஸ்பியாகவும், வேலூர் மாவட்டம் பெண்களுக்குஎதிரான குற்றப்புலனாய்வு பிரிவு டிஎஸ்பியாக இருந்த சரவணன் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி டிஎஸ்பியாகவும் பணியிட மாற்றம் செய்யப்படுகின்றனர்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் டிஎஸ்பியாக இருந்த ராமச்சந்திரன் தூத்துக்குடி மாவட்ட குற்ற ஆவண காப்பகம் டிஎஸ்பியகாவும், கள்ளக்குறிச்சி மாவட்ட மதுவிலக்கு மற்றும் அமலாக்கப்பிரிவு டிஎஸ்பியாக இருந்த அறிவழகன் தென்காசி மாவட்ட பெண்களுக்கு எதிரான குற்ற புலனாய்வுப்பிரிவு டிஎஸ்பியாகவும், கள்ளக்குறிச்சி டிஎஸ்பியாக இருந்த தேவராஜ் தேனி மாவட்ட குற்ற ஆவண காப்பக டிஎஸ்பியாகவும், அரியலூர் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணைய டிஎஸ்பியாக இருந்த கென்னடி திருச்சி நகர கே.கே. நகர் உதவி கமிஷனராகவும், தேனி மாவட்டம் ஆண்டிபட்டி டிஎஸ்பியாக இருந்த சண்முகசுந்தரம் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் டிஎஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திமுக எம்எல்ஏவுக்கு எதிரான வழக்கை ரத்து செய்த ஐகோர்ட்




சென்னை, மே.7

திமுக எம்.எல்.ஏ காந்திராஜனுக்கு எதிரான வழக்கை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.க., எம்.எல்.ஏ. காந்திராஜன் தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 2021ல் நடந்த சட்டப் பேரவை தேர்தலில் வேடசந்தூர் தொகுதியில் தி.மு.க., சார்பில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றேன். தேர்தலின் போது, ஆரத்தி எடுத்தவர்களுக்கு பணம் கொடுத்ததாக வந்த புகாரின்பேரில் என் மீதும், மேலும் 4 பேர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

2021ம் ஆண்டு பதிவு செய்த வழக்கின் குற்றப்பத்திரிகையை 2024ம் ஆண்டுதான் தாக்கல் செய்துள்ளனர். எனவே, இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் வக்கீல் கே.முத்து கணேச பாண்டியன் ஆஜராகி, ஓர் ஆண்டு சிறை தண்டனை வழங்க கூடிய வழக்கிற்கு 3 ஆண்டுகளுக்கு பின் குற்றப்பத்திரிகையை போலீசார் தாக்கல் செய்துள்ளனர்.

சுதந்திரமான சாட்சிகளும் அதில் இல்லை. எனவே, வழக்கை ரத்து செய்யவேண்டும் என்று வாதிட்டார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, திண்டுக்கல் மாஜிஸ்திரேட்டிடம் அனுமதி பெறாமல், போலீசார் வழக்கை எந்திரனமாக பதிவு செய்துள்ளனர். அதனால், மனுதாரர் மீதான வழக்க ரத்து செய்யப்படுகிறது என்று உத்தரவிட்டார்.

## பிளஸ் 2 தேர்வு முடிவுகள் இன்று வெளியீடு



சென்னை, மே.8

பிளஸ்2 தேர்வு முடிவுகள் நாளை காலை 9 மணிக்கு வெளியாகிறது. கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி தேர்வு முடிவுகளை வெளியிட உள்ளார். தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வு மார்ச் 3ம் தேதி தொடங்கியது. தமிழகம் புதுச்சேரியில் 7518 பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள், தனித் தேர்வர்கள் என 8 லட்சத்து 21 ஆயிரத்து 57 பேர் தேர்வில் பங்கேற்க பதிவு செய்திருந்தனர். இவர்களில் 3 லட்சத்து 78 ஆயிரத்து 545 பேர் மாணவர்கள், 4 லட்சத்து 24 ஆயிரத்து 23 பேர் மாணவியர். சிறைவாசிகள்145 பேர் எழுதினர். மார்ச் 25ம் தேதி தேர்வு முடிந்தது.

இதையடுத்து, தமிழகத்தில் சுமார் 80 மையங்கள் அமைக்கப்பட்டு 40 ஆயிரம் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் மூலம் பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணிகள் தொடங்கியது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடக்கும் பிளஸ்2, பிளஸ்1, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகளின் முடிவுகள் மே 9, 19ம் தேதிகளில் வெளியிடப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அறிவித்து இருந்தார்.


அதன்படி, தற்போது பிளஸ்2 விடைத்தாள் திருத்தும் பணி முடிக்கப்பட்டு, சென்னை கோட்டூர்புரம் பகுதியில் உள்ள டேட்டா மையத்தில் மதிப்பெண் பட்டியல்கள், தேர்வு முடிவுகளை வெளியிடுவதற்கான பட்டியல்கள் தயாரிக்கும் பணி நடக்கிறது. மே 9ம் தேதி தேர்வு முடிவை வெளியிடுவதாக அறிவித்து இருந்த நிலையில் ஒரு நாள் முன்னதாக மே 8ம் தேதி தேர்வு முடிவு வெளியிட உள்ளதாக தேர்வுத்துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்வுத் துறை அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: மார்ச் 2025ல் நடந்த 20242025ம் கல்வி ஆண்டுக்கான பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகள் மே 8ம் தேதி சென்னை கோட்டூர்புரம் அண்ணாநூற்றாண்டு நூலகத்தில், காலை 9 மணி அளவில் வெளியிடப்படுகிறது. மாணவர்கள் தங்கள் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ள வசதியாக *http://resultsdigilocker.gov.in*, *www.tnresults.nic.in* என்ற இணைய தளங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மாணவ மாணவியர் இந்த இணைய தளங்களில் தங்களின் பதிவு எண்கள் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

பள்ளி மாணவர்களை பொருத்தவரையில் தாங்கள் படித்த பள்ளிகளிலும் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம். மேலும், பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் படித்த பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதி மொழிப்படிவத்தில் குறிப்பிட்டு செல்போன் எண்ணுக்கும், தனித் தேர்வர்களுக்கு ஆன்லைனில் விண்ணபிக்கும்போது வழங்கிய செல்போன் எண்ணுக்கும் குறுஞ்செய்தி வழியாக தேர்வு முடிவுகள் அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, மே 19ம் தேதி பிளஸ் 1, மற்றும் பத்தாம் வகுப்புக்கான தேர்வு முடிவுகள் வெளியிடப்பட உள்ளன. மேற்கண்ட வகுப்புகளில் மொத்தம் 25 லட்சத்து 57 ஆயிரம் பேருக்கு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

## மக்கள் பிரச்னைகள் குறித்த புரிதல் நடிகர் விஜய்யிடம் இல்லை: பிரகாஷ் ராஜ் தாக்கு



சென்னை, மே.8

நடிகர் விஜய்யின் அரசியல் பிரவேசம் குறித்து பிரகாஷ் ராஜ் கூறியதாவது: பவன் கல்யாண் தனது சகோதரர் சிரஞ்சீவியின் குடும்பத்தில் இருந்து வந்தவர். அவரது ரசிகர்கள் பட்டாளத்தை மட்டுமே தொண்டர்களாகக் கொண்டவர். அவர் இதனை ஏற்காமல் இருக்கலாம். ஆனால், அதுதான் நிஜம். அதேபோல் விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரன் ஒரு பிரபலமான இயக்குனர்.

விஜய் தனது நட்சத்திர அந்தஸ்தைப் பெறுவதற்கு முன்பே அவரை பிரபலமாக்க ஏராளமான படங்களை தயாரித்தவர் அவரது தந்தை. பவன் கல்யாண் பல வருடங்களுக்கு முன்பே அரசியலுக்கு வந்தவர்,

விஜய் அரசியலுக்கு புதியவர். நான் அவர்களோடு படங்களில் நடிக்கும் போது ஒருபோதும் அரசியல் பற்றி தீவிரமாகப் பேசியதில்லை. அவர்கள் நடிகர்கள். அதன் பிரபலத்தைக் காரணமாக வைத்து அரசியலில் நுழைந்தனர். ஆனால், இருவரிடமும் தெளிவான அரசியல் பார்வையோ அல்லது மக்கள் பிரச்சினைகள் குறித்த புரிதலோ இல்லை.

பவன் கல்யாண் தனது கட்சி தொடங்கி 10 ஆண்டுகளில், அவரிடம் ஒரு தொலைநோக்கு பார்வையோ அல்லது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த புரிதலோ இருப்பதை பார்த்ததில்லை. அதை நான் விஜய்யிடமும் காணவில்லை. ஆனால், பவன் கல்யாண் அல்லது விஜய் போன்றவர்கள் அரசியலில் நுழையும்போது, மக்கள் இருக்கும் அமைப்பில் ஒரு வெற்றிடத்தைத் தேடுகிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு சில இடங்கள் கிடைக்கக் கூடும். ஆனால், பின்னர் அவர்கள் தங்களை நிரூபிக்க வேண்டும். விஜய் பேசும் பேச்சை கேட்கிறேன்.

ஆனால், எப்படிப் போராடுவது என்பதில் அவருக்கு ஆழமான புரிதல் இல்லை. பவன் கல்யாண் பிரபலமான நடிகர் என்பதால் நாட்டின் தலைவிதியை அவரது கைகளில் கொடுக்க வேண்டுமா? அவர் தனது சித்தாந்தத்தில் சீரற்றவர்.

## தலைமை செயலாளர், டிஜிபி அவசர கூட்டம் தமிழ்நாட்டில் 2 இடங்களில் போர்க்கால ஒத்திகை




சென்னை, மே.8

போர்க்கால ஒத்திகையை இன்று நடத்த மாநில அரசுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த 2 நாட்களுக்கு முன் உத்தரவிட்டிருந்தது. இது குறித்து மாநில அரசு நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதில் இந்தியா முழுவதும் 300 மாவட்டங்களை சேர்ந்த பல்வேறு மாநிலங்களை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஆலோசனை கூட்டத்தில், இந்திய எல்லைப் பகுதிகளில் வான் வழி தாக்குதல், போர் மற்றும் ஏவுகணை தாக்குதல், எதிரிகள் தாக்கும்போது பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் எப்படி தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும். அந்நாட்டினர் எல்லைக்குள் நுழைந்தால் சைரன் ஒலிப்பது, மின் தடை ஏற்பட்டால் எப்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து இன்று பயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து பொதுத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஸ் கலந்து கொண்டார். அவருடன் போலீஸ் உயர் அதிகாரிகள், உளவுத்துறை அதிகாரிகள், தமிழக அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். நேற்று மாலை தலைமை செயலாளர் முருகானந்தம் தலைமையில் மற்றொரு கூட்டம் நடந்தது. இதில் உள்துறை செயலாளர் தீரஜ் குமார், வருவாய்த்துறை செயலாளர், டிஜிபி சங்கர் ஜிவால் மற்றும் கமாண்டோ படை ஏடிஜிபி, கல்பாக்கம் அனுமின்நிலைய இயக்குநர், துறைமுக தலைவர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு பிறகு தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், ''மக்களுக்கான பாதுகாப்பு ஒத்திகை நடத்த ஒன்றிய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் கல்பாக்கம் அணுமின் நிலையம், சென்னைதுறைமுகம் ஆகிய இடங்களில் இன்று மாலை 4 மணிக்கு பாதுகாப்பு ஒத்திகை நடைபெறும். எதிரிநாட்டு விமானம் குண்டுபோட வந்தால் என்ன செய்வது என்பது குறித்து ஒத்திகை நடக்கிறது.

இதில் மாநில அவசர கால நடவடிக்கை மையம் மற்றும் ஒத்திகை நடைபெறும் பகுதியின் கலெக்டர்கள்,

தீயணைப்பு வீரர்கள், அதுதொடர்பான வீரர்கள் பங்கேற்கின்றனர். ஒத்திகை 30 நிமிடம் நடக்கிறது. அப்போது எதிரி நாட்டு விமானம் வந்தால், சைரன் ஒலிக்கும். அந்த நேரத்தில் அங்கு பணியில் இருக்கும் ஊழியர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஒத்திகை நடைபெறுகிறது.

## அடகு கடையில் 250 பவுன் கொள்ளை

அரியலூர், மே.8

ராஜஸ்தான் மாநிலம் வில்வாடா மாவட்டத்தை சேர்ந்தவர் ஆசாத்லோடா (46). இவர், அரியலூர் சின்னகடைவீதியில் அடகுகடை நடத்தி வருகிறார். இவரது கடையில் ராஜஸ்தானை சேர்ந்த கணையாலால் (35) என்பவர் வேலை பார்த்து வருகிறார். அடகு வைக்கும் நகைகளை சின்னகடைவீதியில் உறவினர் நடத்தி வரும் மற்றொரு அடகு கடையான நானேஸ் பேங்கர்ஸ் கடையில் உள்ள பெட்டகத்தில் பாதுகாப்பாக வைப்பது வழக்கம்.

இந்நிலையில் ஆசாத்லோடாவின் தாய்க்கு உடல்நிலை சரியில்லாததால் கடந்த 2 மாதங்களுக்கு முன் அவர் ராஜஸ்தான் சென்றார். இதனால் கணையாலால் நகை கடையை கவனித்து வந்தார். கடந்த 3ம்தேதி மாலை 6 மணி அளவில் கடையிலிருந்து மொத்த நகைகளை பாதுகாப்பாக வைக்க எடுத்த சென்ற கணையாலால் அங்கு வைக்கவில்லை.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கடையை திறக்க கணையாலால் வரவில்லை. போன் செய்த போது ஸ்விட்ச் ஆப் என வந்துள்ளது. இதனால் ராஜஸ்தானில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை அரியலூர் வந்த ஆசாத்லோடா, கடையை திறந்து பார்த்தபோது கடை பெட்டகத்தில் வைத்திருந்த 250 பவுன் நகை, 8 கிலோ வெள்ளி மற்றும் ரூ.5 லட்சம் ரொக்கம் இல்லாதது தெரிய வந்தது. தலைமறைவான கணையாலாலை போலீசார் தேடி வருகின்றனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

8.5.2025

# வங்கியில் போலீஸ்காரர் மர்ம மரணம்

காரைக்குடி, மே.8

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி சுப்பிரமணியபுரத்தில் தேசிய வங்கியின் மண்டல அலுவலகம் மற்றும் அதன் கீழ் பகுதியில் அனைத்து வங்கிகளின் பணம் வைக்கும் மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு துப்பாக்கி ஏந்திய ஆயுதப் படை காவலர்கள் 3 மணி நேரத்துக்கு ஒருவர் என ஷிப்ட் முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள்.



திருப்புவனம் அருகே மாரநாடு பகுதியை சேர்ந்த ஆயுதப்படை காவலர் மதன்குமார் (25) காலை நேர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது வங்கி பணியாளர்கள் பணம் வைக்கும் மையத்தின் முன்பக்க கதவை திறந்து உள்ளே சென்றபோது அங்கு மதன்குமார் இறந்து கிடந்துள்ளார்.

இதுகுறித்து காரைக்குடி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# மதமோதல் முயற்சி அர்ஜூன் சம்பத் மீது வழக்குப்பதிவு

கோவை, மே.8

இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத்தின் பிறந்தநாள் விழா சமீபத்தில் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி கோவை ராஜவீதி தேர்நிலை திடலில் இந்து மக்கள் கட்சி சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது. இதில் பேசிய நிர்வாகிகள் ஒரு மதத்தினரை இழிவுபடுத்தி, மதக்கலவரத்தை தூண்டும் வகையில் பேசியுள்ளனர்.

இது குறித்து பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸ்காரர் சசிக்குமார், வெறைட்டிஹால் ரோடு போலீசில் புகார் அளித்தார்.



அதன்பேரில், கலவரத்தைதூண்டும்வகையில் பேசியதாக இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத், நிர்வாகி கணேஷ் பாபு, சிவ சங்கர் ஆகிய 3 பேர் மீது போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்துக்கு அலுவல் சாரா உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, மே.8

தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாடு அரசால், மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் 2007ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த வாரியம் அவ்வப்போது மறுசீரமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வாரியம் அரசு அலுவலர் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்கள் கொண்டுள்ளது. இந்த வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறைநியமிக்கப்படுவர்.



அதன்படி, தற்பொழுது புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளதால் பார்வையற்றோர், செவித்திறன் பாதிக்கப்பட்டோர், தசைசிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோர், தவழும் மாற்றுத்திறனாளிகள், உயரம் குறைந்த மாற்றுத்திறனுடையோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர், கை/கால் இயக்க குறைபாடுடையோருக்கான மாற்றுத்திறனாளி பிரதிநிதிகள் மற்றும் புறஉலக சிந்தனையற்ற/மதி இறுக்கமுடையோர், மூளை முடக்குவாதம், அமில வீச்சால் பாதிக்கப்பட்டோர், அறிவுசார் குறைபாடுடையோர், கற்றல் குறைபாடுடையோர், மனநல பாதிப்பு, ரத்த சோகை பாதிப்பு மற்றும் பல்வகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களுக்கு சேவை புரியும் தொண்டு நிறுவனத்தை சார்ந்த பிரதிநிதிகள் இந்த வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

விண்ணப்பங்களைசம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவரின் பரிந்துரையுடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் வழியாக மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை600 005 என்ற முகவரிக்கு 30.5.2025 தேதிக்குள் அனுப்பி வைக்க ஏதுவாக, விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் வரும் 23.5.2025க்குள் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஒருங்கிணைந்த குருப்4 பணிகள் தேர்வு வனக்காப்பாளர், வனக்காவலர் பதவிகளுக்கு 6வது கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு: மே 12ல் தொடங்கும் என டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு

சென்னை, மே.8

ஒருங்கிணைந்த குருப்4 பணிகள் தேர்வில் வனக்காப்பாளர், வனக்காவலர் பதவிகளில் உள்ள காலியிடங்களைநிரப்புவதற்கான 6வது கட்ட அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு மே 12ம் தேதி தொடங்கும் என டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது. இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சிசெயலாளர்கோபால சுந்தரராஜ் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

குருப்4 தேர்வில் அடங்கிய பணிகளில் வனக்காப்பாளர், வனக்காவலர் மற்றும் வனக்காவலர் (பழங்குடியின இளைஞர்) பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான 6வது கட்ட அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு மே 12 முதல் 16ம் தேதி வரை சென்னையில் உள்ள டிஎன்பிஎஸ்சி அலுவலகத்தில் நடைபெறும்.



இதற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. அழைப்பாணையை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு அழைக்கப்படும் தேர்வர்களுக்கு அதற்கான விவரம் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக மட்டும் தெரிவிக்கப்படும். தனியே அஞ்சல் மூலம் தகவல் அனுப்பப்பட மாட்டாது.

# கோயில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த 3 பேர் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரணம் வழங்க முதலமைச்சர் உத்தரவு

சென்னை, மே.8

திருவள்ளூரில் கோயில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த 3 பேர்குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரணம்வழங்கமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். வீரராகவன், வெங்கட்ராமன், ஹரிஹரன் ஆகியோர் குடும்பத்துக்கு முதலமைச்சர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# காவல் அதிகாரிகள், ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவு

சென்னை, மே.8

சென்னை பெருநகர காவல் ஆணையாளர்காவலர் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில், 77 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்று உடனடியாகநடவடிக்கைஎடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சென்னை பெருநகர காவல்துறையினரின் பணி சிறக்க அவர்தம் குறைகளை போக்கி, காவலர் குடும்ப நலனுக்கு அதிகாரிகள் உதவிடும் வகையில், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ. அருண், உத்தரவின்பேரில் 06.05.2025 அன்று காவலர்குறைதீர்சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளதாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது.



அதன்பேரில், வேப்பேரி, காவல் ஆணையாளர் அலுவலக கலந்தாய்வு கூடத்தில் நடைபெற்ற ‘‘காவலர்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில்‘‘ சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ. அருண், சென்னை பெருநகர காவல், சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து காவல் நிலையங்கள், ஆயுதப் படை மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணிபுரியும், 3 உதவி ஆணையாளர்கள், 08 காவல் ஆய்வாளர்கள், 07 காவல் உதவி ஆய்வாளர்கள், 59 காவல் ஆளிநர்கள் என 77 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்றார்.

இம்முகாமில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் பணிமாறுதல், தண்டனை களைதல், காவலர் குடியிருப்பு கோருதல், ஊதியம் குறைபாடு களைதல் உள்ளிட்ட மனுக்களை பெற்று, இம்மனுக்கள் மீதுவிரைந்துநடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல், கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) விஜயேந்திர பிதாரி, துணை ஆணையாளர் G.சுப்புலட்சுமி, (நிர்வாகம்), காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# விரைவில் பிரமாண்ட டிரெய்லர்... 'ஹரி ஹர வீர மல்லு' படப்பிடிப்பை நிறைவு செய்த பவன் கல்யாண்



தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகராக வலம் வருபவர் பவன் கல்யாண். தற்போது இவர் 'ஹரி ஹர வீர மல்லு' என்ற படத்தில் நடித்து வருகிறார். கிரிஷ் மற்றும் ஜோதி கிருஷ்ணா இயக்கி உள்ள இந்த படத்திற்கு கீரவாணி இசை அமைத்திருக்கிறார்.

நிதி அகர்வால் கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படம், தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம் மற்றும் கன்னட மொழியில் ஒரு பான் இந்தியா படமாக வருகிற 9ம் தேதி வெளியாக உள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பை பவன் கல்யாண் நிறைவு செய்துள்ளார். இதனை படக்குழு புகைப்படம் பகிர்ந்து தெரிவித்துள்ளது. பிரமாண்டமான டிரெய்லரும் பிளாக்பஸ்டர் பாடல்களும் விரைவில் வெளியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படம் வருகிற 9ம் தேதி வெளியாக இருக்கும் நிலையில், 30ம் தேதிக்கு தள்ளிபோயுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஏற்கனவே இப்படம் கடந்த மாதம் 28ம் தேதியில் இருந்து வருகிற 9ம் தேதிக்கு தள்ளிப்போனது குறிப்பிடத்தக்கது.

# 'சிரஞ்சீவி'யுடன் முதல்முறையாக ஜோடி சேரும் பிரபல நடிகை?



பிரபல தெலுங்கு இயக்குனர் அனில் ரவிபுடி, சிரஞ்சீவியின் 157 வது படத்தை இயக்குகிறார். இப்படத்தை சுஷ்மிதா கொனிடேலாவின் கோல்ட் பாக்ஸ் எண்டர்டெயின்மென்ட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஷைன் ஸ்கிரீன்ஸ் பேனரின் கீழ் சாஹு கரபதி தயாரிக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் துவங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக நடிகை நயன்தாரா நடிக்க உள்ளதாக தெரிகிறது. இந்நிலையில், இரண்டாவது கதாநாயகியாக பிரபல நடிகை கேத்ரின் தெரசா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக செய்தி வந்துள்ளது.

நயன்தாரா முதன்மை கதாநாயகியாக நடிக்கவிருந்தாலும், கேத்தரின் கதாபாத்திரம் கதைக்கு முக்கியமானது என்று கூறப்படுகிறது. இது சிரஞ்சீவிக்கு ஜோடியாக அவர் பணியாற்றும் முதல் படமாகும்.

கேத்தரின், சிரஞ்சீவியின் 'வால்டேர் வீரய்யா' படத்தில் நடித்திருக்கிறார். ஆனால் அதில் ரவி தேஜாவுக்கு ஜோடியாக நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சூரி அண்ணனின் வளர்ச்சி பலருக்கு மகிழ்ச்சி; டைரக்டர் லோகேஷ் கனகராஜ்

தமிழ் சினிமாவில் ஆரம்பத்தில் காமெடி கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து வந்தவர் நடிகர் சூரி. வெற்றி மாறன் இயக்கிய 'விடுதலைபாகம்1'படத்தில்முதல்முறையாகசூரிகதாநாயகனாக அறிமுகமானார். அதனை தொடர்ந்து, 'கருடன், கொட்டுக்காளி' , 'விடுதலை பாகம் 2 ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்தார்.



இதற்கிடையில் இவர் விலங்கு வெப் தொடரை இயக்கி புகழ்பெற்ற பிரசாந்த் பாண்டிராஜ் இயக்கத்தில் 'மாமன்' படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தை லார்க் ஸ்டுடியோஸ் தயாரிக்கிறது. நடிகை ஐஸ்வர்யா லட்சுமி இப்படத்தில் கதாநாயகியாகநடிக்கிறார்.நடிகைஸ்வாசிகாசூரியின்தங்கையாக நடிக்கிறார். மாமன் படம் 16ம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில் இப்படத்தின் இசை வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது.

இதில் டைரக்டர் லோகேஷ் கனகராஜ் கலந்துகொண்டார். நிகழ்ச்சியில் லோகேஷ் கனகராஜ் பேசியதாவது, சூரி அண்ணனின் வளர்ச்சி பலருக்கு மகிழ்ச்சியை கொடுத்திருக்கிறது. நாம் வளர்வதை மற்றவர் பார்த்து நிஜமாக மகிழ்வதே உண்மையான வளர்ச்சி. நான் சிறியதாக தயாரிப்பு நிறுவனம் தொடங்கியுள்ளேன். 10 கதைகள்வந்தால்அதில் 5கதை சூரி அண்ணனுக்குதான்வருகின்றன. இந்த வளர்ச்சி மிகப்பெரியது. உங்களுக்கு இன்னும் பல வெற்றிகள் வர வேண்டும்' என்றார்.

# டி20 கிரிக்கெட்டில் நோபால் வீசுவது பெருங்குற்றம் ஹார்திக் பாண்ட்யா



ஐ.பி.எல். தொடரில் மும்பையில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த மும்பை 20 ஓவரில் 8 விக்கெட்டை இழந்து 155 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து 156 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் களம் கண்டது. குஜராத் பேட்டிங் செய்து கொண்டிருந்தபோது திடீரென மழை குறுக்கிட்டது. அப்போது குஜராத் 14 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 107 ரன்கள் எடுத்திருந்தது. இதையடுத்து மழை நின்ற உடன் டக் ஒர்த் லூயிஸ் முறைப்படி 19 ஓவரில் 147 ரன்கள் எடுத்தால் வெற்றி என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. வெற்றிபெற கடைசி ஓவரில் 15 ரன்கள் தேவைப்பட்டது. இறுதியில் 19வது ஓவரில் 7 விக்கெட்டுகளை இழந்த குஜராத் 147 ரன்கள் எடுத்து மும்பையை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி திரில் வெற்றி பெற்றது. மும்பையின் தோல்விக்கு கடைசி ஓவரில் தீபக் சாஹர் வீசிய நோ பால் மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இந்த போட்டியில் தோல்வி கண்ட பின்னர் மும்பை கேப்டன் பாண்ட்யா அளித்த பேட்டியில் கூறியதாவது, நாங்கள் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தினோம் என்று நினைக்கிறேன். ஒரு குழுவாக இணைந்து வெற்றியை நோக்கி போராடினோம். நிச்சயமாக இந்த பிட்சில் கூடுதலாக ரன்களை சேர்த்திருக்க முடியும். எனது கணிப்பின்படி மும்பை அணி 25 ரன்கள் குறைவாக எடுத்துவிட்டது. ஆனாலும், இவ்வளவு அருகில் வந்து தோல்வியை பெறுவதற்கு பவுலர்கள்தான் காரணம். இந்த போட்டியில் கேட்ச்களை விடவும், நோபால்களை அதிகமாக வீசிவிட்டோம் என்று நினைக்கிறேன். அதிலும் கடைசி ஓவரில் வீசிய நோபால் பற்றி என்ன சொல்வதென தெரியவில்லை. டி20 கிரிக்கெட்டில் நோபால்களை வீசுவது பெருங்குற்றம் என்று கருதுவேன். ஏனென்றால் நோபால் மூலம் சேர்க்கப்படும் ரன்கள் நிச்சயம் நமக்கு பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

அதேபோல் மும்பை அணியின் அத்தனை வீரர்களும் 120 சதவீதம் தங்களின் பங்களிப்பை வழங்குவது மகிழ்ச்சி அளிக்கிறது. ஏனென்றால், குறைந்த ஸ்கோரை அடித்திருந்தாலும், கடைசி வரை போராடியுள்ளோம். மழை தொடர்ந்து கொண்டே இருந்தது. 2 முறை ஆட்டம் நிறுத்தப்பட்டு தொடங்கியது சரியாக அமையவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# ரோகித், விராட் கோலி தொடர்ந்து விளையாடுவார்களா..? பயிற்சியாளர் கம்பீர் பதில்

இந்தியாவில் தற்போது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் நிறைவடைந்ததும் இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் அடுத்த மாதம் 20ம் தேதி தொடங்குகிறது. சமீபத்தில் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர்களை இந்தியா இழந்தது. இந்த டெஸ்ட் தொடர்களில் இந்தியா தோல்வி காண சீனியர் வீரர்களான ரோகித் மற்றும் விராட் சிறப்பாக செயல்படாததே மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக அவர்கள் இருவரையும் டெஸ்ட் அணியில் இருந்து நீக்க வேண்டும் என கருத்துகள் வலுத்தன. இதன் காரணமாக அவர்கள் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம் கிடைக்குமா? என கேள்வி எழும்பி உள்ளது. இந்நிலையில், ரோகித், விராட் கோலி தொடர்ந்து விளையாடுவார்களா? என்பது குறித்து இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர்கவுதம் கம்பீர் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, முதலில், ஒரு பயிற்சியாளரின் வேலை அணியை தேர்வு செய்வது கிடையாது. அணியை தேர்வு செய்வது தேர்வாளர்களின் பணியாகும். ஒரு ஆட்டத்தில் ஆடும் லெவன் வீரர்களை மட்டுமே பயிற்சியாளர் தேர்ந்தெடுப்பார். ரோகித் சர்மா, விராட் கோலி ஆகியோர் சிறப்பாக செயல்படும் வரை அணியில் ஒரு அங்கமாக இருப்பார்கள். கிரிக்கெட்டை நீங்கள் எப்போது தொடங்குகிறீர்கள், எப்போது முடிக்கிறீர்கள் என்பது உங்களது தனிப்பட்ட முடிவாகும். ஒரு வீரரின் ஆட்டம் சிறப்பாக இருக்கும் போது அவரை பயிற்சியாளரோ, தேர்வு குழுவினரோ, இந்திய கிரிக்கெட் வாரியமோ எப்போது ஓய்வு பெற வேண்டும் என்று சொல்ல முடியாது. 2027ம் ஆண்டு ஒருநாள் உலகக் கோப்பை போட்டியில் அவர்கள் ஆடுவார்களா? என்பது அவர்களது செயல்பாட்டை பொறுத்து அமையும். அவர்கள் செயல்படும் விதம் தான் அவர்களுடைய தேர்வை உறுதி செய்யும். அவர்களது ஆட்டம் குறித்து நான் என்ன சொல்ல வேண்டும். ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை போட்டியில் அவர்கள் எப்படி விளையாடினார்கள் என்பதை உலகமே பார்த்தது. எந்தவொரு வீரரும் தங்களது பிரியா விடை போட்டியை நினைத்து கிரிக்கெட் ஆடுவது கிடையாது. அதனை விட நாட்டுக்காக போட்டியை எப்படி வென்று கொடுப்பது என்ற முயற்சியில் தான் கவனம் செலுத்துவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# ஐபிஎல்: மும்பையை வீழ்த்தி குஜராத் திரில் வெற்றி

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நாட்டின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த 56வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த மும்பை 20 ஓவர்கள் முடிவில் 155 ரன்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக வில் ஜாக்ஸ் 53 ரன்கள் சேர்த்தார். இதையடுத்து 156 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் களமிறங்கியது. ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது திடீரென மழை குறுக்கிட்டது. அப்போது குஜராத் 14 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 107 ரன்கள் எடுத்திருந்தது.

இதையடுத்து மழை நின்ற உடன் டக் ஒர்த் லூயிஸ் முறைப்படி 19 ஓவரில் 147 ரன்கள் எடுத்தால் வெற்றி என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. வெற்றிபெற கடைசி ஓவரில் 15 ரன்கள் தேவைப்பட்டது. இறுதியில் 19வதுஓவரில் 7விக்கெட்டுகளை இழந்த குஜராத் 147 ரன்கள் சேர்த்தது. இதன் மூலம் டக் ஒர்த் லூயிஸ் முறைப்படி மும்பையை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தில் குஜராத் டைட்டன்ஸ் திரில் வெற்றிபெற்றது. இந்த வெற்றி மூலம் புள்ளி பட்டியலில் குஜராத் டைட்டன்ஸ் முதல் இடம் பிடித்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.